தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புரட்டாசி 30, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 அக்டோபர் 17, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு."

இந்த உலகமானது, நேற்று உயிருடன் இருந்தவரை இன்று இல்லாமல் செய்து விட்டோம் என்ற அகந்தையைப் பெருமையாகக் கொண்டதாகும்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் திரு. அ.மு. அமீது இப்ராகிம், திரு. கே.கே. வீரப்பன், திரு. ஏ.எம். இராஜா, திரு. எஸ்.பி. பச்சையப்பன், திரு. எஸ். புருஷோத்தமன், திரு. பெ.சு. திருவேங்கடம், திரு. தே. ஜனார்த்தனன், திரு. பே. தர்மலிங்கம், திரு. எம்.ஏ. ஹக்கீம், திரு. கோவை தங்கம் ஆகியோர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. அ.மு. அமீது இப்ராகிம் அவர்கள் 12-5-2022 அன்றும், திரு. கே.கே. வீரப்பன் அவர்கள் 15-6-2022 அன்றும், திரு. ஏ.எம். இராஜா அவர்கள் 24-7-2022 அன்றும், திரு. எஸ்.பி. பச்சையப்பன் அவர்கள் 16-8-2022 அன்றும், திரு. எஸ். புருஷோத்தமன் அவர்கள் 17-8-2022 அன்றும், திரு. பெ.சு. திருவேங்கடம் அவர்கள் 12-9-2022 அன்றும், திரு. தே. ஜனார்த்தனன் அவர்கள் 13-9-2022 அன்றும்,*

[பேரவைத் தலைவர்][2022 அக்டோபர் 17

திரு. பே. தர்மலிங்கம் அவர்கள் 15-9-2022 அன்றும், திரு. எம்.ஏ. ஹக்கீம் அவர்கள் 18-9-2022 அன்றும் மற்றும் திரு. கோவை தங்கம் அவர்கள் 12-10-2022 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ.மு. அமீது இப்ராகிம் அவர்கள் 1989-1991 ஆம் ஆண்டுகளில் கடலாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. கே.கே. வீரப்பன் அவர்கள் 1996-2001 ஆம் ஆண்டுகளில் கபிலமலை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள். மேலும், அவர் 1990-1996 ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ஏ.எம். இராஜா அவர்கள் 1967-1971 மற்றும் 1971-1976 ஆகிய ஆண்டுகளில் பவானி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. எஸ்.பி. பச்சையப்பன் அவர்கள் 1967-1971 ஆம் ஆண்டுகளில் சங்கராபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. எஸ். புருஷோத்தமன் அவர்கள் 1985-1988 ஆம் ஆண்டுகளில் அரியலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றினார்கள்.

திரு. பெ.சு. திருவேங்கடம் அவர்கள் 1977-1980, 1980-1984, 1989-1991 மற்றும் 1996-2001 ஆகிய ஆண்டுகளில் கலசப்பாக்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றினார்கள்.

2022 அக்டோபர் 17] [பேரவைத் தலைவர்]

திரு. தே. ஜனார்த்தனன் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் விழுப்புரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றினார்கள். மேலும், 1993–1996 ஆம் ஆண்டுகளில் அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. பே. தர்மலிங்கம் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் பாளையங்கோட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

திரு. எம்.ஏ. ஹக்கீம் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் மத்திய மதுரை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. கோவை தங்கம் அவர்கள் 2001–2006 மற்றும் 2006–2011 ஆகிய ஆண்டுகளில் வால்பாறை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)